**28. அநதாரியின் கதை**

தொண்டைவள நாட்டில் வாயல் என்னும் ஊரில் அந்தாரி என்னும்பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் கல்வி கற்கும் பொருட்டுச் சோழவள நாட்டில் உறத்தூரில் வாழ்ந்துவந்த மறையவரிடம் வந்து கல்வி கற்றான். நாளடைவிற் கல்வியிற் சிறந்து விளங்கினான். கன்றாப்பூருக்குத் தலைவனான சிங்கராயன் என்பவன் இவனுடைய கல்வித் திறத்தைக் கண்டு வியந்தான். அந்தணரிடம்அந்தாரியைத் தனக்கு விற்குமாறு கேட்டான். அந்தணரும் அவ்வாரே விற்றார். இவனுடைய கல்வித்திறமைஊரெங்கும் பரவியது



தண்டாயுதன் என்னும் வேளாளனுக்குச் சிங்கராயனுடைய கட்டளைப்படி இவன்சீட்டுக்கவி பாடினான். இவனுடைய பேரும் புகழும் நாளடைவில் நாடெங்கும் பரவியது. மதுரைச் சொக்க நா தப்பெருமான்பது வடமொழியிலுள்ள சுந்தரபாண்டியம் என்னும்நூலை இவன் தமிழாற் செய்து அரங்கேற்றினான். "சீட்டுக் கவிதை அநதாரி செப்புங் தமிழின் திறனறிந்தோன்.

[அந்தாரிப் புலவன்]